සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

නාට්‍ය හා රංග කලාව I
நாடகமும் அரங்கியலும் I
Drama and Theatre I

**58 T I**

**15.08.2018 / 0830 - 1140**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

சுட்டெண் : ..................................

| பகுதி I | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | |

**அறிவுறுத்தல்கள் :**

* பகுதி **I** இலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடை எழுதிய பின்னர், அதனை பகுதி **II** இன் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.
* பகுதி **II** இல் **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

* **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.
* இப்பகுதியில் **1** தொடக்கம் **40** வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** எழுதுக.

**1.** மேல்வருவனவற்றுள் படைப்பாளியின் துணையின்றி நயக்கக்கூடிய கலை வடிவம்
(1) நாடகம் (2) நடனம் (3) இசை
(4) இலக்கியம் (5) பலே (......)

**2.** தொலைக்காட்சி நாடகத்தின் பிரதான பண்புகளில் ஒன்று
(1) கேட்டலின் மூலம் நுகரப்படுதல்
(2) குரல் வெளிப்பாட்டைக் கொண்டிருத்தல்
(3) பார்வையாளர் துலங்கலுக்கு இடம் இல்லாதிருத்தல்
(4) யதார்த்த நாடகங்களாக அமைந்திருத்தல்
(5) கமராவை ஊடகமாகக் கொண்டிருத்தல் (......)

**3.** நடிகரின் தொடர்பாடலில் முதன்மை வகிப்பது
(1) சைகைகள் (2) பேச்சு (3) கண்
(4) பாடல் (5) உடல் (......)

**4.** மேல்வருவனவற்றுள் நாடகத்திற்கும் நாவலுக்கும் இடையிலான வேறுபாட்டைக் காட்டுவது எது ?
(1) இலக்கியமொன்று காணப்படும்.
(2) கதைக் கட்டமைப்பு காணப்படும்.
(3) பாத்திரங்களைக் கொண்டிருக்கும்.
(4) பார்ப்போரின் ஊடாட்டத்திற்கு இடமிருக்கும்.
(5) படைப்பாளியின் கற்பனைக்கு இடமிருக்கும். (......)

**5.** நாட்டிய சாஸ்திரம் குறிப்பிடும் அரங்க வகைகளுள் 'விக்கிரஸ்ர' என்பது,
(1) சதுர அரங்கு ஆகும். (2) செவ்வக அரங்கு ஆகும்.
(3) முக்கோண அரங்கு ஆகும். (4) வட்ட அரங்கு ஆகும்.
(5) முன்துருத்திய அரங்கு ஆகும். (......)

tamilguru.lk

[பக். 2 ஐப் பார்க்க

**6.** வான்திரை/சைக்ளோராமா இன் பங்களிப்பு **அல்லாதது**
(1) வேட உடை அணிந்த நடிகரை மறைத்து வைக்க உதவுதல்
(2) பக்கம் மாற்ற உதவுதல்
(3) பின்னணிக் காட்சிகளை அமைக்க உதவுதல்
(4) மேடை ஒளியூட்டின் மாற்றத்துக்கு உதவுதல்
(5) பார்ப்போரையும் கேட்போரையும் பிரித்து வைக்க உதவுதல் (……)

**7.** குறியீட்டு ஒளியமைப்பினை அரங்கிற்கு அறிமுகப்படுத்தியவர்
(1) அன்ரு அன்ரொயின் (2) அடொல்ப் அப்பியா (3) டேவிட் பெலஸ்கோ
(4) ஹென்றிக் பெக் (5) பிபினா (……)

**8.** நடிப்பின்போது உடலை நெகிழ்வாக வைத்திருப்பதற்கு உதவும் பயிற்சி
(1) புலனடக்கப் பயிற்சி (2) தளர்வுப் பயிற்சி (3) சுவாசப் பயிற்சி
(4) மூச்சுப் பயிற்சி (5) பேச்சுப் பயிற்சி (……)

**9.** கூத்து ஆடப்படும் இடமாக சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படுவது
(1) ஆடுகளம் (2) வட்டக்களரி (3) நாடகசாலை
(4) கொட்டகை (5) கூத்தாட்டவை (……)

**10.** 'ஆஹார்ய அபிநயம்' என்பதனால் குறிப்பிடப்படுவது
(1) உடல்வழிச் சித்திரிப்பு (2) உணர்ச்சிவழிச் சித்திரிப்பு
(3) குரல்வழிச் சித்திரிப்பு (4) காண்பியவழிச் சித்திரிப்பு
(5) இசைவழிச் சித்திரிப்பு (……)

**11.** நாடகக் கட்டமைப்பில் கதைப்பின்னலை முக்கியமானதாகக் குறிப்பிட்டவர்
(1) பரதர் (2) சூரியநாராயண சாஸ்திரிகள்
(3) அரிஸ்டோட்டல் (4) தனஞ்சயன்
(5) ஒகஸ்ரா போல் (……)

**12.** மேல்வரும் கூற்றுகளுள் நாடக எழுத்துரு தொடர்பில் **பொருத்தமற்றது**
(1) அது வார்த்தைகளின் கலையாகும்.
(2) நாடக ஆசிரியரிடமிருந்து நடிகர் மூலம் பார்ப்போருடன் தொடர்புறும் கலையாகும்.
(3) பாத்திரத்தின் சொல்லாடல்கள், செயலியக்கங்கள் போன்றவற்றைக் கொண்டிருக்கும் கலையாகும்.
(4) நாடகத்தைப் படைப்பதற்கான உள்ளார்ந்த ஆற்றலைக் கொண்டிருக்கும் கலையாகும்.
(5) கால ஒழுங்கில் முறையான தகவல்களைக் கொண்டிருக்கும் கலையாகும். (……)

**13.** காவியபாணி நடிப்பு முறையின் அம்சம் **அல்லாதது**
(1) மோடிமைப்படுத்தப்பட்ட நடிப்பு முறை பயன்படுத்தப்படுதல்
(2) உரைநடையிலான சித்திரிப்பு முறை பயன்படுத்தப்படுதல்
(3) நடிப்புக்கு மருட்கை விளைவைத் தோற்றுவித்தல்
(4) செய்துகாட்டற் பண்பினைக் கொண்டிருத்தல்
(5) பார்ப்போரிடையே சிந்திப்பு மனோபாவத்தைத் தூண்டுதல் (……)

**14.** கியோஜின் என்னும் நசைச்சுவை இடையீடு வரும் அரங்கு
(1) கபுக்கி (2) புன்றகு (3) கோவாகா
(4) நோ (5) ஒபேரா (……)

**15.** கிரேக்க மகிழ்நெறியில் வரும் பாடுநர் குழாம்,
(1) நாடகக் கதை மாந்தரின் உறவினரைக் கொண்டிருக்கும்.
(2) முற்றிலும் பெண்களைக் கொண்டிருக்கும்.
(3) மிருகபட்சிக் குழாம்களைக் கொண்டிருக்கும்.
(4) சற்றர்களைக் கொண்டிருக்கும்.
(5) மூத்தோரைக் கொண்டிருக்கும். (……)

More Past Papers at
tamilguru.lk

**16.** நாடகமொன்று தணிக்கை செய்யப்படுவதற்கான காரணம்
(1) ரசனை குறைவாக இருத்தல்
(2) தெளிவான சித்திரிப்பு முறைமை இல்லாமை
(3) தேவைக்கு அதிகமாக நீண்டிருத்தல்
(4) மத, இன மோதுகைக்கு இடமளித்தல்
(5) தனிப்பட்ட மனித தாக்குதல்களைக் கொண்டிருத்தல் (……)

**17.** சிங்களச் சிறுவர் நாடகத்துறையில் முக்கியமானவர்
(1) சோமலதா சுபசிங்க (2) சிறியாணி அமரசிங்க (3) அனோஜா வீரசிங்க
(4) பராக்கிரம நிரியெல்ல (5) ஜெரோம் டி சில்வா (……)

**18.** நாடகத் தலைவனின் முயற்சி வெற்றிபெற வேறொருவர் துணைபுரிவதாகக் கற்பனை செய்யப்படுவது,
(1) பிரகரி எனப்படும். (2) பிந்து எனப்படும். (3) பதாக எனப்படும்.
(4) பிஜ எனப்படும். (5) கார்ய எனப்படும். (……)

**19.** சீன நாடக மரபில் பெண் பாத்திரமேற்று உலகப் புகழ்பெற்ற நடிகர்
(1) கனாமி மோட்டோகியோ (2) சியாமி மோட்டோக்கியோ (3) சுவான் சென்
(4) மே லாங் வாங் (5) செற் சுவான் (……)

**20.** 'கொடோவிற்காகக் காத்திருத்தல்' (Waiting for Godot) எனும் நாடகம் எந்த வகைக்குரியது ?
(1) அபத்தம் (2) யதார்த்தம் (3) அகயதார்த்தம்
(4) காவியம் (5) வெளிப்பாட்டு வாதம் (……)

**21.** 'வெண்கட்டி வட்டம்' என்ற நாடகத்துக்கான விடயப்பொருளை பிறெ.'.ட் பெற்றுக்கொள்வதற்கு மூலமாக அமைந்தது
(1) சமஸ்கிருத கதை (2) மகாபாரதக் கதை (3) சீன நாட்டார் கதை
(4) ஜப்பானிய நாட்டார் கதை (5) கிறிஸ்தவக் கதை (……)

**22.** ஐரோப்பிய அரங்கின் நன்கமைந்த நாடகக் கட்டமைப்பை உருவாக்கியவர்
(1) யூஜினோ பாபா (2) யூஜின் (3) அயனெஸ்கோ
(4) ஜேனே (5) ரெனஸி வில்லியம்ஸ் (……)

**23.** 'கதிரைப் பூசை' இடம்பெறும் நாட்டார் வடிவம்
(1) வேடன் பறி (2) நாட்டை (3) வாசகப்பா
(4) பொன்னர் சங்கர் (5) மகிடி (……)

**24.** இசை நாடகத்தின் இன்றியமையாத அம்சமாக விளங்குவது
(1) புராணக் கதையைக் கொண்டிருத்தல்
(2) மகிழ்ச்சிகரமான முடிவைக் கொண்டிருத்தல்
(3) பாடலே அரங்காய் அமைந்திருத்தல்
(4) ஆட்டத்தில் கட்டியக்காரன் வரவு இடம்பெறல்
(5) அண்ணாவியார் பக்கப்பாட்டு பாடுதல் (……)

More Past Papers at
tamilguru.lk

**25.** நாடகத்தில் வேட முகத்தின் முக்கிய பயன்பாடு யாது ?
(1) பாத்திரத்தின் இயல்பைக் காட்டுதல் (2) சிரிப்பூட்டுதல்
(3) நடிகரின் முகத்தை மறைத்தல் (4) பேய் பிசாசுகளைக் காட்டுதல்
(5) கடவுளைக் காட்டுதல் (……)

**26.** அரங்கில் செவிப்புலரீதியான தாக்கத்தைப் பார்வையாளருக்கு ஏற்படுத்தும் துணைக் கலை
(1) காட்சி விதானிப்பு (2) ஒளியூட்டு (3) இசை விதானிப்பு
(4) வேட உடை (5) ஒப்பனை (……)

[பக். 4 ஐப் பார்க்க

More Past Papers at
tamilguru.lk

**27.** கற்பித மோடி நாடகங்களின் பிரதான இயல்பு
(1) மேடைப் பின்னணி குறியீடாக அமைதல்
(2) வேட உடைகள் மிகைப்படுத்தப்பட்டு காட்டப்படல்
(3) ஒப்பனை இயல்பானதாகக் காணப்படல்
(4) சொல்லாடல் வாழ்வை ஒத்ததாகக் காணப்படல்
(5) அளிக்கையானது ஆடல், பாடலைக் கொண்டிருத்தல் (……)

**28.** கபுக்கி அரங்கில் 'ஒன்ன கத்தா' குறிப்பது
(1) ஆண் வேடம் தாங்கும் பெண்களை
(2) ஆண் வேடம் தாங்கும் ஆண்களை
(3) பெண் வேடம் தாங்கும் பெண்களை
(4) பெண் வேடம் தாங்கும் ஆண்களை
(5) ஆண், பெண் வேடங்களைத் தாங்கும் பெண்களை (……)

**29.** 'நோ' நாடகங்களின் கட்டமைப்பை ஒழுங்குமுறையில் கொண்ட தெரிவு யாது ?
(1) ஆரம்பம், எத்தனம், பலன்
(2) ஆரம்பம், வளர்ச்சி உச்சகட்டம்
(3) ஆரம்பம், வளர்ச்சி, முரண்பாடு, சிக்கல், தீர்வு
(4) ஆரம்பம், வளர்ச்சி, சிக்கல், முரண்பாடு, தீர்வு
(5) ஆரம்பம், எத்தனம், நெருக்கடி, உச்சகட்டம் (……)

**30.** சாத்வீக பாவத்தின் 'வைவர்ணய' இன் மூலம் சுட்டப்படுவது யாது ?
(1) உடல் ஸ்தம்பித்து நிற்றல் (2) குரல் மாறுதல்
(3) கண்ணீர் சொரிதல் (4) உடல் நடுங்குதல்
(5) நிறம் மாறுதல் (……)

**31.** 1990 களில் ஈழத்தமிழ் அரங்க வெளிப்பாட்டில் மேற்கிளம்பிய முக்கிய அரங்க மூலகம்
(1) உடல்மொழி (2) ஒளியூட்டு (3) சொல்லாடல்
(4) காட்சி (5) இசை (……)

**32.** வடமோடிக் கூத்தில் பாத்திரங்களை அறிமுகப்படுத்துவது
(1) விளையாட்டுத் தரு (2) கொச்சகத் தரு (3) மறுதரு
(4) கொலுத் தரு (5) சபைத்தரு (……)

**33.** மேல்வருவனவற்றுள் ஒழுக்கப் பண்பு நாடகங்கள் தொடர்பில் **பொருத்தமற்ற** கூற்று யாது ?
(1) மனிதர்களின் துர்க்குணமும் பலவீனமும் எடுத்துக்காட்டப்படும்.
(2) 16ஆம் நூற்றாண்டில் இவை பிரபல்யமாயின.
(3) பக்தி, சமய பிரசாரம் அல்லாது மானுடத்துவம் பற்றி எடுத்துக்கூறும்.
(4) மனித குல உண்மைக்கும் ஏமாற்று வித்தைக்கும் இடையிலான போராட்டமாகக் காணப்படும்.
(5) அற்புத நாடகங்கள் தோன்றிய காலத்திலேயே இவையும் தோன்றின. (……)

**34.** பேராசிரியர் எதிரிவீர சரத்சந்திர முக்கியத்துவம் பெறுவதற்கான காரணம் யாது ?
(1) சிங்களத்தில் சிறந்த சமூக நாடகங்களை எழுதியமை
(2) சிறந்த கவிதை நாடகங்களை மேடையேற்றியமை
(3) சிங்கள பாரம்பரிய அரங்கின் அடிப்படையில் புதிய அரங்கைப் படைத்தமை
(4) மொழிபெயர்ப்பு நாடகங்களினூடாக நவீன அரங்கை உருவாக்கியமை
(5) சிங்களத்தில் சிறந்த ஆங்கில நாடக மரபைத் தோற்றுவித்தமை (……)

**35.** வேட உடை பற்றிய **தவறான** கூற்று
(1) அலங்காரத்துக்கு உதவுவது.
(2) நாடக மோடியைக் காட்டுவது.
(3) நாடக காலத்தைக் காட்டுவது.
(4) பாத்திரத்தின் அசைவுகளை மெருகூட்டுவது.
(5) பாத்திரத்தின் பண்புகளை எடுத்துக்காட்டுவது. (……)

[பக். 5 ஐப் பார்க்க


**36.** மேல்வருவனவற்றுள் நடிகர் பற்றிய **பொருத்தமற்ற** கூற்று
(1) உள்ளார்ந்த கற்பனை ஆற்றல் கொண்டவர்.
(2) சபைக்கூச்சம் அற்றவர்.
(3) அழகான உடலைக் கொண்டவர்.
(4) புதிதளிக்கும் ஆற்றல் கொண்டவர்.
(5) சமூக அவதானம் மிக்கவர். (……)

**37.** படத்திற் காட்டப்பட்டுள்ள வேட முகம் இடம்பெறும் நாடகம் யாது ?
(1) கிரேக்க அவலச் சுவை (Tragedy)
(2) கிரேக்க மகிழ்நெறி (Comedy)
(3) யப்பானிய நோ (Noh)
(4) யப்பானிய கபுகி (Kabuki)
(5) சீன ஒபேரா (Opera)




(……)

**38.** படத்தில் காட்டப்பட்டுள்ள ஐரோப்பிய நாடகவியலாளர் யார் ?
(1) ஹென்றிக் இப்சன்
(2) அன்ரன் செக்கோவ்
(3) பீற்றர் புரூக்
(4) சாமுவேல் பெக்கற்
(5) றிச்சட் ஷெக்னர்




(……)

**39.** படத்தில் காட்டப்பட்டுள்ள கூத்து அண்ணாவியாரின் பெயர் என்ன ?
(1) நாகப்பு
(2) செல்லையா
(3) நாகமணிப்போடி
(4) பூந்தான் யோசேப்பு
(5) முருகவேள்



(……)

**40.** படத்தில் காட்டப்பட்டுள்ள காட்சி இடம்பெறும் நாடகம் எது ?
(1) பொறுத்தது போதும்
(2) சங்காரம்
(3) கந்தன் கருணை
(4) முழங்கு முரசு
(5) வெறியாட்டு



(……)

* *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

නාට්‍ය හා රංග කලාව I
நாடகமும் அரங்கியலும் I
Drama and Theatre I

58 T I

## பகுதி II

**அறிவுறுத்தல்கள் :**

※ பிரிவு **A** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பிரிவு **B** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

### பிரிவு A

**1.** (i) 'ஆற்றுகைக் கலைகள்' என்பதை உதாரணங்கள் தந்து விளக்குக. (05 புள்ளிகள்)

(ii) அரங்கக் கலையை ஏனைய இரு ஆற்றுகைக் கலைகளுடன் ஒப்பிட்டு வேறுபடுத்துக. (05 புள்ளிகள்)

(iii) ஆற்றுகைக் கலை, கட்புலக் கலை ஆகியவற்றுடன் அவற்றின் கலைஞர்களும் பார்வையாளர்களும் தொடர்பாடும் தன்மையைப் பரிசீலிக்குக. (05 புள்ளிகள்)

**2.** (i) 'அரங்கக் கோட்பாடு' என்ற எண்ணக்கருவை உதாரணங்கள் தந்து விளக்குக. (05 புள்ளிகள்)

(ii) உமக்குத் தெரிந்த ஈழத்து அரங்க நெறியாளர் ஒருவர் அல்லது ஒகஸ்ரா போல், அரங்கில் முன்னிறுத்திய கோட்பாடுகள் பற்றிச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iii) மேலே (ii) இல் நீர் தெரிவுசெய்த அரங்கவியலாளரின் கோட்பாடுகள் பற்றிய உமது அபிப்பிராயங்களை முன்வைக்குக. (05 புள்ளிகள்)

**3.** (i) நாடக பாடம் (dramatic text) ஒன்றை ஆற்றுகை செய்த உமது அனுபவத்தை விவரிக்குக. (05 புள்ளிகள்)

(ii) புதிதளிப்பு ஆற்றுகை ஒன்றில் ஈடுபட்ட உமது அனுபவத்தை விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iii) நாடக பாடம், புதிதளிப்பு ஆகிய ஆற்றுகைகளுக்கு இடையிலான வேறுபாட்டைப் பரிசீலிக்குக. (05 புள்ளிகள்)

### பிரிவு B

**4.** சிறுவர் அரங்கின் இயல்புகள் பற்றி உதாரணங்கள் தந்து விளக்குக. (15 புள்ளிகள்)

**5.** ஈழத்தில் அரங்க விமர்சனத்தின் சமகால நிலையை மதிப்பிட்டு, அதை மேம்படுத்துவதற்கான உமது ஆலோசனைகளை முன்வைக்குக. (15 புள்ளிகள்)

**6.** மேல்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) திருவிழா
(ii) கோரஸ்
(iii) ரச
(iv) காட்சி அமைப்பு
(v) பட்டறை அரங்கு

(03 × 05 = 15 புள்ளிகள்)

More Past Papers at
tamilguru.lk

※※※

இங்கே வேறாக்கவும்

4397

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

**ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**
**Department of Examinations, Sri Lanka**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

නාට්‍ය හා රංග කලාව II
நாடகமும் அரங்கியலும் II
Drama and Theatre II

58 T II

16.08.2018 / 0830 - 1140

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

சுட்டெண் : ...............................

| பகுதி I மொத்தப் புள்ளிகள் | |
|---|---|

**அறிவுறுத்தல்கள் :**

* பகுதி **I** இலுள்ள **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதிய பின்னர், அதனை பகுதி **II** இன் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.
* பகுதி **II** இல் **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

* **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.
* இப்பகுதியில் **1** தொடக்கம் **40** வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** எழுதுக.

**1.** செவிவழி நுழையும் ஒலி, இசை, உரை ஆகியவை இணைந்த கலை வடிவம் யாது ?
(1) சினிமா (2) ஒபேறா (3) வானொலி நாடகம்
(4) மேடை நாடகம் (5) பலே (.....)

**2.** கைவினையானது கலையிலிருந்து எந்த அம்சத்தின் அடிப்படையில் வேறுபடுகிறது ?
(1) பிரதியீடு இல்லாமை
(2) கற்பனை காணப்படுகின்றமை
(3) அழகை முதன்மையாகக் கொண்டுள்ளமை
(4) மீளுருவாக்கம் செய்யப்படுகின்றமை
(5) மனவெழுச்சி, உணர்ச்சி போன்றவை காணப்படுகின்றமை (.....)

More Past Papers at
tamilguru.lk

**3.** நடிகர் ஒருவர் தனது உரையைத் தனக்குத்தானே பேசுவது எவ்வாறு அழைக்கப்படும் ?
(1) புறச்சொல் (2) தனிமொழி (3) தன்னுரை
(4) ஆகாயக் கிளர்த்தல் (5) அசரீரி (.....)

**4.** நாடகவாக்கம் பற்றி எழுதப்பட்ட இரண்டு சமஸ்கிருத நூல்கள்
(1) தொல்காப்பியம், கவிதையியல் (2) கவிதையியல், நாட்டிய சாஸ்திரம்
(3) கவிதையியல், நாடகவியல் (4) தசரூபகம், நாடகவியல்
(5) தசரூபகம், நாட்டிய சாஸ்திரம் (.....)

**5.** சிங்கள நாடக அரங்கில் இடம்பெறும் தொவில் என்பது,
(1) பெண்களின் சடங்காகும். (2) பேயோட்டும் சடங்காகும். (3) மகிழ்வளிப்புச் சடங்காகும்.
(4) வேடமுக ஊம நாடகமாகும். (5) கருவளச் சடங்காகும். (.....)

**6.** பிரஹசனம் எனும் நாடக வகை கொண்டிருப்பது,
(1) வரலாற்றுக் கதையையாகும். (2) நகைச்சுவைக் கதையையாகும்.
(3) நாட்டார் கதையையாகும். (4) தொன்மக் கதையையாகும்.
(5) பௌத்த ஜாதகக் கதையையாகும். (.....)

[பக். 2 ஐப் பார்க்க

**7.** சிலப்பதிகாரத்தில் மாதவியின் நாடகப் பயிற்சி பற்றிக் கூறும் பகுதி
(1) கடலாடு காதை (2) கானல் வரி (3) மங்கல வாழ்த்துப் பாடல்
(4) அரங்கேற்று காதை (5) வழக்காடு காதை (......)

**8.** கதை கூறும் அரங்கு அல்லது எடுத்துரைக்கும் அரங்கு என அழைக்கப்படுவன,
(1) பள்ளு, இசைநாடகம் ஆகியனவாகும்.
(2) கீர்த்தனை, பா நாடகம் ஆகியனவாகும்.
(3) பள்ளு, குறவஞ்சி ஆகியனவாகும்.
(4) நொண்டி, இசைநாடகம் ஆகியனவாகும்.
(5) குறவஞ்சி, இசைநாடகம் ஆகியனவாகும். (......)

**9.** உலக நாடக தினம் எப்போது கொண்டாடப்படுகிறது ?
(1) ஜனவரி 14 (2) பெப்ரவரி 21 (3) மார்ச் 27
(4) ஏப்ரல் 26 (5) ஒக்டோபர் 28 (......)

**10.** முப்பத்திரண்டு வகையான மெய்ப்பாடுகள் பற்றிக் கூறும் நூல்
(1) திருக்குறள் (2) கலித்தொகை (3) மலைபடுகடாம்
(4) தொல்காப்பியம் (5) பரிபாடல் (......)

**11.** களத்துமேடு மேடையாகப் பயன்படுத்தப்படும் நாடகம்
(1) கோலம் (2) நாடகம (3) சொக்கரி
(4) நூர்த்தி (5) வெதஹுட்டன (......)

**12.** தெருக்கூத்தினைப் பாரம்பரியமாக ஆற்றுகை செய்து வந்தவர்
(1) புரிசை கண்ணப்ப தம்பிரான் (2) பிரசன்னா ராமசுவாமி
(3) வெளி ரெங்கராஜன் (4) சூரியநாராயண சாஸ்திரியார்
(5) அ. மங்கை (......)

**13.** தென்கிழக்காசிய நாடக மரபில் பாவைக்கூத்தைப் போன்று மன்னார்ப் பிரதேசத்தில் பயிலப்பட்டு வரும் நாடக மரபு
(1) வாசாப்பு (2) வடபாங்கு (3) தென்பாங்கு
(4) உடக்கு பாசுக்க (5) பாஸ்கா (......)

**14.** சமஸ்கிருத நாடகத்தின் சூத்திரதாரியை ஒத்தவராக சிங்கள 'நாடகம' இல் வருபவர்
(1) பகுபூதையா (2) பொத்தே குரு (3) கோணங்கி
(4) வெசமுனி (5) பபூன் (......)

**15.** நாடக உரையாடல்களில் 'இயாம்பிக்' கவிதைகளைப் பயன்படுத்திய நாடக மரபு
(1) கிரேக்க மரபு (2) நவீன நாடக மரபு (3) எலிசபெத் கால மரபு
(4) உரோம மரபு (5) சமஸ்கிருத மரபு (......)

**16.** 'குளோப் அரங்கு' எந்த வடிவத்தில் அமைந்துள்ளது ?
(1) வட்டம் (2) சதுரம் (3) அரை வட்டம்
(4) ஐங்கோணம் (5) எண்கோணம் (......)

**17.** மேல்வருவனவற்றுள் கலையரசு சொர்ணலிங்கத்தின் நடிப்பு நுட்பங்களில் **உள்ளடங்காதது**
(1) பாத்திரமாகவே மாறி நடித்தல்
(2) மேடையில் நிற்கும் வரை நடித்தல்
(3) நடிப்பில் தூரப்படுத்தலைப் பயன்படுத்துதல்
(4) பார்ப்போரை உணர்ச்சி நிலைக்கு உள்ளாக்குதல்
(5) நடிப்புப் பயிற்சியில் கவனம் செலுத்துதல் (......)

**18.** மேல்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - நடப்பியல் பிரச்சினையை மேடைக்குக் கொண்டு வந்தமை
B - மேடையில் நிற்கும் வரை நடித்தல்
C - சமூக மோதுகை நிலைச் சித்திரிப்பில் விவாகத்தை முக்கிய பிரச்சினையாகப் பேசுதல்
D - கற்பனை பாத்திரங்கள் செயற்கைத் தமிழில் பேசுதல்
E - நடிப்பு, எழுத்துரு, காட்சி ஆகியவற்றில் இயற்பண்புவாத முறைமையைக் கொண்டு வந்தமை
இவற்றுள் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையுடன் தொடர்புடைய கூற்றுகள் யாவை ?
(1) A B C D ஆகியன மாத்திரம் (2) A B C E ஆகியன மாத்திரம்
(3) A B D E ஆகியன மாத்திரம் (4) A C D E ஆகியன மாத்திரம்
(5) B C D E ஆகியன மாத்திரம் (......)

**19.** தெருவெளி அரங்கு பற்றிய **பொருத்தமற்ற** கூற்று
(1) ஆற்றுகை வெளி தெருவாகும்.
(2) சிறுவர் முதல் பெரியோர் வரை பார்ப்போராகக் காணப்படுவர்.
(3) வண்ணமயமான வேட உடை, ஒப்பனை என்பன காணப்படும்.
(4) அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் மட்டும் நடைபெறும்.
(5) சமகால சமூக, அரசியல் பிரச்சினைகளைக் கருப்பொருளாகக் கொண்டிருக்கும். (......)

**20.** சங்க காலத்தில் கிணை, முரசம் போன்ற இசைக் கருவிகளை வாசித்தோர்
(1) விறலியர் (2) கோடியர் (3) பொருனர்
(4) பாணர் (5) வயிரியர் (......)

**21.** சிங்களச் சடங்கரங்கில் 'தஹஅட்ட சன்னிய' என்பது,
(1) கண்டிக்குரியது. (2) காலிக்குரியது. (3) மாத்தறைக்குரியது.
(4) அம்பாந்தோட்டைக்குரியது. (5) நீர்கொழும்பிற்குரியது. (......)

**22.** யப்பானிய சாமுராய் போர்வீரர்களின் கதையைக் கூறும் நாடக வடிவம்
(1) கபுக்கி (2) நோ (3) புன்றகு
(4) கியோஜின் (5) கொவாக்கா (......)

**23.** கரடி, சம்பந்தம் ஆகிய நாடகங்களின் ஆசிரியர்
(1) பேர்ணாட்ஷா (2) எமிலிசோலா (3) அன்ரன் செக்கோவ்
(4) சாமுவேல் பெக்கட் (5) பேட்டோல்ட் பிறெ.'.ட் (......)

**24.** அபத்த அரங்கின் முன்னோடியான சாமுவேல் பெக்கட்டின் தாய்நாடு
(1) ரஷ்யா (2) அமெரிக்கா (3) இங்கிலாந்து
(4) போலந்து (5) ஐரிஸ் தேசம் (......)

**25.** பாத்திரத்தின் அசைவுகளை எடுத்துக்காட்ட உதவுவது
(1) அடிப்பாத ஒளி (2) பரப்பொளி (3) பொட்டொளி
(4) கரையொளி (5) பெருக்கொளி (......)

**26.** கலையரசு சொர்ணலிங்கம் உருவாக்கிய நாடக சபை
(1) சுகுண விலாச சபை (2) மட்டக்களப்பு நாடக சபா
(3) சரஸ்வதி விலாச சபை (4) போய்ஸ் கம்பனி
(5) லங்கா சுபோத விலாச சபா (......)

**27.** வில்லியம் சேக்ஸ்பியரின் நாடகங்கள் பெரும்பாலும் எந்த மோடியில் அமைந்திருக்கும் ?
(1) யதார்த்த மோடி (2) அபத்த மோடி (3) குறியீட்டு மோடி
(4) கற்பித மோடி (5) வெளிப்பாட்டு வாத மோடி (......)

**28.** இ. முருகையனால் எழுதப்பட்ட தெருவெளி நாடகம்
(1) மாய மான் (2) கசிப்பு
(3) திருவிழா (4) களத்தில் காத்தான்
(5) மானிடம் சுடரும் ஒரு விடுதலை (......)

[பக். 4 ஐப் பார்க்க

**29.** 'தன்னானே கலைக் குழு' இனைத் தொடக்கி வைத்தவர்
(1) மு. இராமசுவாமி (2) ந. முத்துசாமி (3) இராமானுஜம்
(4) கே. ஏ. குணசேகரன் (5) அம்பி (……)

**30.** சமூக மாற்றத்திற்கான அரங்கு என்ற நூலின் ஆசிரியர்
(1) க. பாலேந்திரா (2) இ. சிவானந்தன் (3) அ. தாசீசியஸ்
(4) இ. முருகையன் (5) க. சிதம்பரநாதன் (……)

**31.** மேல்வருவோருள் வானொலி நாடகத்துறையுடன் மிக நெருக்கமான தொடர்பைக் கொண்டவர்
(1) ஏ. ரி. பொன்னுத்துரை (2) திரவியம் இராமச்சந்திரன்
(3) சானா சண்முகநாதன் (4) பெஞ்ஜமின் செல்வம்
(5) அன்ரனி ஜீவா (……)

**32.** மேல்வருவனவற்றுள் கீர்த்தனை நாடகங்களின் பண்பு **அல்லாதது** எது ?
(1) இசையை மாத்திரம் கருவியாகக் கொண்டது.
(2) தெலுங்கு இசையின் ஆதிக்கத்தைக் கொண்டது.
(3) ஆரம்பத்தில் ஒருவரே கதை கூறி நடிப்பதாக இருந்தது.
(4) இந்துஸ்தானி மெட்டுப் பாக்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டது.
(5) கதாகாலேட்சப மரபிலிருந்து தோன்றியது. (……)

**33.** சேக்ஸ்பியரின் மேல்வரும் நாடகங்களுள் மகிழ்நெறி (comedy) நாடகமாகக் கொள்ளத்தக்கது
(1) மக்பெத் (2) பன்னிரண்டாம் இரவு
(3) சிம்பலின் (4) அன்ரனியும் கிளியோபெற்றாவும்
(5) த ரெம்பஸ்ற் (……)

**34.** சிங்கள, ஆங்கில நாடகாசிரியர் ஜெரோம் சில்வா அவர்களால் தொடக்கப்பட்ட நாடக அமைப்பு
(1) திரிகோண ஆர்ட் சென்ரர் (2) அபிநயா கலைக்குழு
(3) மக்கள் களரி (4) வேர்க்சொப் பிளேயர்ஸ்
(5) விபுல ரங்க சபா (……)

**35.** திருக்குற்றாலக் குறவஞ்சியில் வரும் 'குளுவ நாடகம்' என்பது,
(1) குறத்தி குறிசொல்லும் மையப் பகுதியைக் குறிக்கும்.
(2) குற்றாலநாதர் மீது வசந்தவல்லி காதல் கொள்வதைக் குறிக்கும்.
(3) சிங்கன், சிங்கி மேல் காதல் கொள்வதைக் குறிக்கும்.
(4) பரமாத்மா ஜீவாத்மாவுடன் சங்கமிப்பதைக் குறிக்கும்.
(5) சிங்கன், சிங்கியைத் தேடுமாறு நூவனிடம் கூறும் பகுதியைக் குறிக்கும். (……)

**36.** அலங்காரரூபன் கூத்தின் கரு யாது ?
(1) காதலில் சோகம் (2) காதலில் வீரம் (3) காதலில் பக்தி
(4) காதலில் வெற்றி (5) காதலில் தோல்வி (……)

**37.** 'ஒரு பாவையின் வீடு' நாடகத்தில் மேடைக்கு வரும் பாத்திரங்களை ஒழுங்குமுறையில் கொண்ட தெரிவு யாது ?
(1) நோறா, ஹெல்மர், குறொக்ஸ்டட், ராங், திருமதி. லிண்டே
(2) நோறா, ஹெல்மர், ராங், குறொக்ஸ்டட், திருமதி. லிண்டே
(3) ஹெல்மர், ராங், குறொக்ஸ்டட், திருமதி. லிண்டே
(4) ராங், திருமதி. லிண்டே, நோறா, ஹெல்மர், குறொக்ஸ்டட்
(5) குறொக்ஸ்டட், நோறா, ராங், திருமதி. லிண்டே (……)

More Past Papers at
tamilguru.lk

**38.** படத்தில் காட்டப்பட்டுள்ள நவீன சிங்கள நாடகக் கலைஞர் யார் ?


(1) எதிரிவீர சரத்சந்திர
(2) குணசேன கலப்பத்தி
(3) தயானந்த குணவர்தன
(4) ஹென்றி ஜெயசேனா
(5) தம்மஜாகொட



(......)

**39.** படத்தில் காட்டப்பட்டுள்ள வேடமுகம் பயன்படுத்தப்படும் நாடகம் யாது ?

(1) கபுகி
(2) நோ
(3) சீன ஒபேறா
(4) கோலம
(5) சொக்கரி



(......)

**40.** படத்தில் காட்டப்பட்டுள்ள காட்சி நாடகம் எது ?

(1) ஒத்தெல்லோ
(2) யூலியஸ்சீசர்
(3) அன்ரிகனி
(4) ஒரு பாவையின் வீடு
(5) மக்பெத்



(......)

* *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

නාට්‍ය හා රංග කලාව II
நாடகமும் அரங்கியலும் II
Drama and Theatre II

58 T II

## பகுதி II

**அறிவுறுத்தல்கள் :**

※ பிரிவு **A** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பிரிவு **B** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

### பிரிவு A

**1.** (i) ஒத்தெல்லோ **அல்லது** அபிக்ஞான சாகுந்தலம் நாடக பாடத்திலுள்ள நாடகச் செயல்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(ii) அந்நாடகத்தில் போதுகையை வளர்ப்பதில் மேலே (i) இல் குறிப்பிட்ட செயல்கள் பெறும் முக்கியத்துவத்தை விளக்குக. (10 புள்ளிகள்)

**2.** திருக்குற்றாலக் குறவஞ்சி **அல்லது** அலங்காரரூபன் நாடக பாடத்திலிருந்து,

(i) ஏதேனுமொன்றைத் தெரிவுசெய்து அதன் நாடக அமைப்பினைத் தருக. (05 புள்ளிகள்)

(ii) மேலே (i) இல் தெரிவுசெய்யப்பட்ட நாடகத்தில் உம்மைக் கவர்ந்த பாத்திரங்கள் **இரண்டின்** குணாதிசயங்களை விளக்குக. (10 புள்ளிகள்)

**3.** (i) உமது பிரதேசத்தில் பாரம்பரியமாக ஆற்றுகை செய்யப்பட்டுவரும் கூத்துக்களை இனங்காண்க. (05 புள்ளிகள்)

(ii) மேலே (i) இல் குறிப்பிட்ட கூத்துக்களில் ஏதாவது ஒன்றில் அக்கூத்தைத் தயாரிக்கும் அண்ணாவியாருக்கும் கூத்துக் கலைஞர்களுக்குமிடையிலான தொடர்பு எவ்வாறு இருக்கும் என்பதனை விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iii) கூத்தின் ஆற்றுகைக்கும் பார்ப்போருக்கும் இடையிலான உறவு எவ்வாறு இருக்கும் என்பதனை விளக்குக. (05 புள்ளிகள்)

### பிரிவு B

**4.** தமிழ் நாட்டில் கி. பி. 1300 இற்குப் பின்னர் நிலவிய நாடக வடிவங்களைக் குறிப்பிட்டு, அவற்றின் வடிவரீதியான பண்புகளையும் மாற்றங்களையும் விளக்குக. (15 புள்ளிகள்)

**5.** ஈழத்துத் தமிழ் அரங்கில் இரு நாடக ஆளுமைகளை இனங்கண்டு, அவர்கள் அரங்கச் செல்நெறியில் திருப்புமுனையை ஏற்படுத்திய விதத்தையும் நாடகத்தைச் சமூக முக்கியத்துவமுடையதாக மாற்றியமைத்த முறையையும் விளக்குக. (15 புள்ளிகள்)

**6.** மேல்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) ஒபேறா
(ii) நாடகம்
(iii) விலாசம்
(iv) கிரேக்க சற்றர் (Satyre)
(v) ஜப்பானிய நோ (03 × 05 = 15 புள்ளிகள்)

* * *

இங்கே வெறாக்கவும்